**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08032024-7112

Volume: 8

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.10.2023

Accepted: 16.12.2023

Published: 01.01.2024

Citation:
Parimala, V. "Seevagasinthamaniyil Kaanapadum Yaazh Patriya Seithikal." Shanlax International Journal of Tamil Research, vol. 8, no. 3, 2024, pp. 65–70.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i3.7112

*Corresponding Author:
parivelu1996@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Seevagasinthamaniyil Kaanapadum Yaazh Patriya Seithikal

**V. Parimala**
*P.hd Scholar, Tamil Nadu Government Music College*
*Thiruvaiyaru, Tamil Nadu, India*
*https://orcid.org/0009-0003-9726-2495*

**Abstract**
There are two types of Kaapiyam. They are imperum kaapiyam and inchiru kaapiyam. In these two kaapiyams more news about music instruments is shown in seevagasinthamani. In this epic most of the information is said only about yaazh. In process of publishing this paper this epic is titled as "Seevagasinthamaniyil Kaanapadum Yaazh Patriya Seithikal"

**Key Words:** Kaapiyam, Yaazh, Music

**References**

1. Perumal, A. N. Tamilar Music, Chennai: World Tamil Research Institute, 1984
2. Saminathaiyar. Way. By Sivakasindamani and Narration by Nachinarkinyar-Mahamagopadhyaya Tanjore: Tamil University, 1986
3. Thiruthakkathevar. Source and Text by Sivaka Chintamani, Chennai: Sarada Publishing House.
4. K. V. Jagannathan. Tamil Copy, Tamil Development Department
5. Chatrasoodamani, A., Rajalakshmi, Ananthanarayanan, Thanjavur: Saraswati Mahal Library, 2009.
6. Srividya. A. Evolution of Yaazh, Chennai, Vanitha Publishing House.

# சீவகசிந்தாமணியில் காணப்படும் யாழ் பற்றியச் செய்திகள்

*வே. பரிமளா*
முனைவர்பட்ட ஆய்வு மாணவி
தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, திருவையாறு

***ஆய்வுச்சுருக்கம்***

*காப்பியம் என்பது இரு வகையாக பிரிக்கபடுகிறது. அவை ஐம்பெரும் காப்பியம், ஐஞ்சிறு காப்பியம் என்று கூறுவர். இதில் ஐம்பெரும் காப்பியங்களில் ஓன்றான சீவகசிந்தாமணியல் இசைக்கருவிகள் பற்றிய செய்திகள் அதிக அளவில் காணப்படுகிறது. அதில் குறிப்பாக யாழ் பற்றிய அதிகமான செய்திகள் உள்ளன. இவற்றை வெளிகொண்டு வரும் வகையில் இந்த ஆய்வு கட்டுரையில் "சீவகசிந்தாமணியில் காணப்படும் யாழ் பற்றிய செய்திகள்" என்று ஆராய்ந்து தரப்பட்டுள்ளது.*

*முக்கியச்சொற்கள்: காப்பியம், நூல் அமைப்பு, இசை, யாழ்*

## முன்னுரை

காப்பியம் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகையான உறுதி பொருட்கள் அடங்கியது. இவை ஐம்பெரும் காப்பியம், ஐஞ்சிறு காப்பியம் என்று வகைப்படும்.

இக்காப்பியங்கள் யாவும் கதையோடு அக்காலக்கட்டத்தில் காணப்பட்ட இசை மற்றும் நடனச் செய்திகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளன. குறிப்பாகச் சிலப்பதிகாரம் இசை மற்றும் நடனம் பற்றிய செய்திகள் நிறைந்ததாகக் காணப்படுகிறது. சிலப்பதிகாரத்தைப் போலவே இசை பற்றிய செய்திகள் நிறைந்து காணப்படும் சீவக சிந்தாமணி பற்றிய இசைக் கட்டுரைகள் முழுமையாக வெளிவரவில்லை. எனவே அதில் காணப்படும் பண் மற்றும் இசைக் கருவிகள் பற்றிய செய்திகளை எடுத்துக் கூறும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

## சீவக சிந்தாமணி கதைச் சுருக்கம்

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சீவகசிந்தாமணி வடமொழிக் கதையினைத் (சத்ரசூடாமணி) தழுவித் தமிழில் எழுந்த காப்பியமாகும். நூல் முழுமையும் விருத்தப்பாவால் ஆனது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் கொண்டு அமைந்த நூலாகும். சீவகசிந்தாமணி காப்பியமானது திருத்தக்கத்தேவர் என்ற சமண முனிவரால் இயற்றப் பெற்றதாகும். இவர் கி.பி. 2ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி7ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. சீவக சிந்தாமணியின் தலைவன் பெயர் சீவகன். சுடுகாட்டில் சீவகன் பிறந்தவுடனே விசையை சிந்தாமணியே என்று அழைத்ததனால் சிந்தாமணி என்பது முதலில் சீவகனுக்கு பெயராக அமைந்தது. சிந்தாமணி என்பது தேவலோகத்தில் உள்ள மணியைக் குறிக்கும்.

## நூல் அமைப்பு

இந்த நூல் இலம்பகம் என்னும் உட்பிரிவுகனை கொண்ட அமைப்பை உடையதாகும். நாமகள் இலம்பகம், கோவிந்தையார் இலம்பகம், காந்தருவ தத்தையார் இலம்பகம், குணமாலையார்

இலம்பகம், பதுமையார் இலம்பகம், கேசமரியார் இலம்பகம், கனகமாலையார் இலம்பகம், விமலையார் இலம்பகம் சுரமஞ்சரியார் இலம்பகம், மண்மகள் இலம்பகம், புமகள் இலம்பகம், இலக்கணையார் இலம்பகம், முக்தி இலம்பகம் என 13 இலம்பகங்களையும், 3145 பாடல்களையும் உடையது. சீவகன் எட்டு மகளிரைத் திருமணம் செய்ததால் "மணநூல்" என்றும் அழைக்கப்படுகிறது.

## இசைச் சிறப்பு

சீவக சிந்தாமணியின் தலைவனான சீவகன் சிறந்த இசைக் கலை வல்லுநராகச் சித்திரிக்கப்படுகின்றனான். இவன் வீணை இசைப்பதிலும், பாடல் இசைப்பதிலும் வல்லவனாகக் காட்டப்பட்டுள்ளதால் சீவக சிந்தாமணியில் பண், இசைக் கருவிகள், நடனக் குறிப்புகள், நாடகச் சிறப்புகள் ஆகியவை நிறைந்து காணப்படுகின்றன. சான்று,

**ஆடலின்ன ரவ்வமு மங்கை கொட்டி நெஞ்சுணப்**
**பாட லின்ன ரவ்வமும் பணைமு ழவ்வ ரவமுங்**
**(நாமகள் இலம் - பா 156)**

## சீவக சிந்தாமணியில் இசை பற்றிய செய்திகள்

தமிழிசையில் பண் என்பது இராகத்தைக் குறிப்பதாகும். சங்க காலம் முதல் பண் பற்றிய செய்திகள் காணப்பட்டபோதிலும், பண் அமைப்போடு நமக்குக் கிடைக்கப் பெற்ற முதல் உருப்படி தேவாரமாகும். பண்ணியல் திறம் என்பது தற்கால ஷாடவ இராகத்தையும், திறம் என்பது ஔடவ இராகத்தையும், திறத்திறம் என்பது ஸ்வராந்தர இராகத்தையும் குறிப்பதாகும். சிலப்பதிகாரத்தில்பண்நேர்திறம்(பூபாளம்) என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. நாமகள் இலம்பகத்தில் பண் பற்றிய செய்திகள் அதிக அளவில் காணப்படுகின்றன

**கலையின தகலமுங் காட்சிக் கின்பமுஞ்**
**சிலையின தகலமும் வீணைச் செல்வமு**
**(கோவிந்தையார் இலம்-411)**

இன்பம் மூட்டும் யாழுடன் பாடும் இசைச் செல்வமும் என்று பாட்டோடு சேர்த்து யாழும் இசைக்கப்பெற்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

**குரல்குர லாகப் பண்ணிக் கோதைதாழ் குஞ்சி யான்றன்**
**விரல்கவர்ந் தெடுத்த கீத மிடறெனத் தெரித றேற்றார்**
**(காந்தர்வ தத்தையார் இலம்-723)**

குரல் குரலாக உள்ள செம்பாலையைப் தம் விரலாலே தடவியெழுப்பிய இசையை மிடற்றுப் பாடல் என்று கருதித் தெளியாதவராய் வானவரும் மக்களும் தம்முள் வேறுபாடின்றி நிலத்தில் மயங்கி வீழ்ந்தனராம். இதில் இசைக் கருவியில் எழுப்பப்படும் இசையானது குரலிசைப்போலவே இருக்கும் சிறப்பானது குறிப்பிடப்பட்டுள்ளது.

**முற்றவம் உடையளாகி முரிநூற் கலைகள் வெல்லாங்**
**கற்றவள் கணங்கொள் நல்யாழனங்கனைத் கனிக்கும் நீராள்**
**(காந்தர்வ தத்தையார் இலம் - 607)**

காந்தருவத்தத்தையைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, இசைக் கலையினை முற்றிலும் அறிந்தவளாகவும், அதனாலே காமனையும் உருக்கும் இயல்பினைக் கொண்டவள் என்று கூறப்பட்டுள்ளது.

**தாம மாலை வார்கு ழற்ற டங்க ணார்க்கி டங்கழி**
**காம னன்ன காளை தன்க ருத்தொ டொத்த தாக**
**மாமலர்த்தெரிய லான்ம ணிமிடறறிடைக்கிடந்த**

**சாம கீத மற்று மொன்று சாமி நன்கு பாடினான்**
**-(சுரமஞ்சரியார் இலம்-2038)**

இசையின் முன்னோடி சாம வேதம் என்பர். அதனால் இசை மறை எனப் போற்றப்படுகிறது. இதனைச் சுட்டும் விதத்தில் சீவக சிந்தாமணியில் சீவகன் கொன்றை மாலையை உடைய இறைவனது நீலமணிபோலும் மிடற்றினிடையே கிடந்த சாம கீதம் ஒன்றைப் பாடினான் என்ற குறிப்பு காணப்படுகிறது.

**புரிமணி சுமந்த பொற்புண்**
**போறுக்கலா நுசப்பிற் பாவை**
**திருமணி வீணை குன்றத்**
**திமிந்ததீம் பாலைநீத்தத்**
**திருமுடியரச ராழ்வ**
**ரம்மனை யறிவ லென்றாள்**
**-(காந்தருவதத்தையார் இலம்-619)**

அழகிய மணியழுத்திய மகரயாழாகிய குன்றில் இருந்து பெருகிய இனிய பாலைப் பண்ணாகிய வெள்ளத்திலே அறிய முடிமன்னன் அமிழ்வார் என மகரயாழிலே பாலைப் பண் இசைத்ததாக இப்பாடல் காட்டுகிறது. இதில் மகர யாழ் பற்றியும், பாலைப் பண் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**சுனைகள் கண்களாக சூழ்ந்து குவளைவிழியால்**
**வுனியலாக உருவ நோக்கி நைந்தற் கிரங்கி**
**னினைவபோலுந் வரையினருவி இதினி நாடி**
**னைகொள்போது வெம்பு வேந்த நாடல் பாடுகின்றான்-**
**(கேமசரியார் இலம்-1417)**

சீவக சிந்தாமணியில் வண்டின் ஓசையானது இசைக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. மேலும் தலைவியின் குரலானது இசையை விட இனிமையானது என இசையோடு உருவகப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

சீவகசிந்தாமணியில் நரம்புக் கருவிகளாக யாழ், வீணை ஆகிய கருவிகளுக்குச் சுருதி சேர்த்தல் முறையும், அதனைப் பயன்படுத்தும் முறையும் அதன் அமைப்புப் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன.

**“பண்டவழ் விரலிற் பாவை பொறிவாத்திரிப்ப பொங்கி**
**விண்டவழ் மேகம் போழ்ந்துவிசும்பிடை பறக்கும் வெய்ய”**
**- (கடவுள் வாழ்-3)**

கடவுள் வாழ்த்துப் பாடலில் பார்ப்பவர் மயங்குமாறு விசயை யாழ் நரம்பில் தவழும் தன் விரல்களாற் பொறியை வலத்தே திரிப்ப எழும்பி வானில் சென்றாள் என கடவுள் வாழ்த்துப் பாடலில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

**“நூல்பொரவரிய நுண்மை நுசுப்பினை யொசியநீங்கிக்**
**கால்பரந் திருந்த வெங்கட் கதிர் முலைகச்சின் வீக்கிக்**
**கோல்பொரச் சிவந்த கோல மணிவிரற் கோதை தாங்கி**
**மேல்வரல் கருதி நின்றார் விண்ணவர் மகளி ரொத்தார்**
**(கோவிந்தையார் இலம்-459)**

யாழ் நரம்புகளை மீட்டியதால் சிவந்த அழகிய விரலால் கூந்தலைத் தாங்கி சீவகன் வரவை எதிர்நோக்கி மகளிர் வான மங்கையரை போன்ற தோற்றத்தைக் கொண்டிருந்ததாகக் குறிப்பிடுமிடத்து யாழ் வாசிப்பதனால் சிவந்த அழகிய விரல்கள் என்று குறிப்புக் காணப்படுகிறது.

**“தீந்தொடை மகர வீணைத் தெள்விளியெடுப்பது தோற்றிப்**
**புந்தொடியரினவதன்னிற புலமிகுத்து டையநம்பி”**
**(காந்தர்வதத்தையார் இலம்-608)**

காந்தர்வத்தத்தையை "அரசன் முதலாக மூவகைக் குலத்தில் உள்ளவர் யாவரிலும் இனிய இசையை எழுப்பும் நரம்புகளையுடைய மகரயாழிலே தெளிந்த இசையை எழுப்பி வெல்பவருக்கு மணமுடிப்பேன்" என முரசறைந்தான் என காந்தர்வத்தத்தை இலம்பகத்தில் மகர யாழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"வீணைவென்றிவன் வெம்முலைப் புந்தட**
**மாணைதோல்வதால் லால்விறன் வெளவுமேற"**
***(காந்தர்வதத்தையார் இலம்-640)***

காந்தர்வத் தத்தையை யாழிலே வென்றிட வந்தவர்கள் அவள் அழகினில் மதிமயங்கி பிதற்றும் இடத்தில் வீணை பற்றிய செய்தி காணப்படுகிறது.

**"மாதர் யாழ் தடவர வந்தமைந்தர்கைந்**
**சீதந்தான் மீண்டன கேள்விக் கின்னரம்"**
***காந்தருவதத்தையார் இலம்-660)***

இதில் தத்தையோடு போட்டியிட்ட மன்னர்கள் இசையில் கின்னர மிதுனப் பறவைகள் யாவும் அவ்விடத்தைவிட்டு அகன்றனவாம். அதுவே காந்தர்வத்தத்தையின் இனிய குரலிசைக்கு மயங்கி மீண்டும் வந்த செய்தி இன்னிசைக்குப் பறவைகளும் மயங்கும் என்பதைக் காட்டுகிறது.

**"திருமலர்க் கமலத் தங்கட்**
**டேனின முரல்வ தொப்ப"**
***-(காந்தருவதத்தையார் இலம்)-662***

அழகிய தாமரை மலரிலே தேனினம் பாடும் தன்மைபோல மலர்ந்த பூங்கோதையாள் பாட யாழ் வாசித்தலில் அந்தணர் தோற்றனர். முருக்கிதலையும் பவளத்தையும் போன்ற செவ்வாயினைக் கொண்ட தத்தை இனிய யாழின் புரிநரம்பினை மீட்டிப் பாடினாள் என்ற குறிப்புக் காணப்படுகிறது.

**"தீந்தொடை நரம்பின்றீமை**
**சிதலாப் பொழுது மோதிப்"**
***-(காந்தருவதத்தையார் இலம்)-721***

இனிய நரம்பின் தீமையைச் சிறிதன்றிப் பெரும்பொழுது ஆராய்ந்து கூறி அதற்குத் தக்க பூமாலை அணிந்த தத்தை காணுமாறு நரம்பின் முறுக்கைத் தளர்த்தி அதில் கிடந்த மயிரைக் காட்ட அவையில் உள்ளோர் தேன் மணக்கும் கூந்தலைக்கொண்ட தத்தை சீவகன் நீண்ட முறுக்கற்ற நரம்பொன்றை நபுலன் கையிலிருந்து பெற்று யாழில் அடைத்துக் கொண்டான் என நரம்பினை குறைத்துக் கூட்டி சுருதி சேர்க்கும் முறை கொடுக்கப்பட்டுள்ளது. இதில் யாழ் நரம்புகளின் குற்றங்களை ஆராய்ந்து முறுக்கிலாத நல்ல நரம்பினைச் சீவகன் பெற்று யாழில் இட்டு வாசித்த செய்தியினைக் அறிய முடிகிறது. கொன்றை, கருங்காலி, தணக்கு போன்ற மரங்கள் யாழ் செய்ய உத்தமமான மரங்கள் என்கிறார்.

**சொல்லிய கொன்றை கருங்காலி மென்முருக்கு**
**நல்ல குமிழும் தணக்குடனே - மெல்லியலாய்**
**உத்தமமான மரங்களிவையென்றார்**
**வித்த யாழோர் வீதி**
***(காந்தருவதத்தையார் இலம்-612)***

வெயில், காற்று, நீர், நிழல் ஆகியவற்றில் அடிபடாமல் அமைந்த நல்ல யாழினை சீவகன் பெற்று, அதில் நல்ல நரம்பினைப் பூட்டி யாழினை ஏந்தி செம்பாலையை குரல் குரலாகப் பண்ணி உலகம் மயங்குமாறு இசைக்கத் தொடங்கினான் எனச் சீவக சிந்தாமணி உரைக்கிறது.

**"பண்ணொன்று பாடலது வொன்றுபல் வளைக்க**
**மண்ணொன்று மெல் விலரலும் வாள் நரம்பின் மேல் நடவர்"**
***- (காந்தருவதத்தையார் இலம்-735)***

சீவகன் பாடிய பாட்டும் அதற்கொத்த யாழிசையும் பல வளையல்கள் அணிந்த கையாளின் கழுவப்பெற்ற மெல்லிய விரலும் ஒள்ளிய நரம்பின் மேல் இசைக்க இயலாமல் கருவியொழிந்த பாட்டும் வானிலே நின்று இயங்கி அக்காலத்தே நடுங்குவதனாலே தத்தை நினைவிழந்து இசைக்கு தோற்று இருந்துவிட்டாள். இப்பாடலில் பாட்டுடைத் தலைவன் சீவகன் யாழ் வாசிக்கும் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

சீவகன் இசைத்திறமையினைக் குறிப்பிடுமிடத்து பத்தர், ஆணி, மருப்பு, நரம்பு, மாடகம் போன்ற யாழுறுப்புக்கள் கூறப்பட்டுள்ளன.

**பணிவரும் பைம்பொற் பத்தர்**
**பல்வினைப் பவள வாணி**
**- (காந்தருவதத்தையார் இலம்-722)**

சீவக சிந்தாமணியில் யாழிசையைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து வானத்தில் பறக்கும் பருந்தின் நிழலானது எவ்விதம் அதனோடேயே சேர்ந்து பயணிக்கிறதோ அதுபோல யாழிசையானது பாடலோடு இணைந்து இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**“பருந்தும் நிழலும் போற்பாட்டு மெழாலும்**
**திருந்து தாரச் சீவகற்கே சேர்ந்தன வென் றெண்ணி**
**விருத்தகயாழ் பண்ணி வீணைதான் தோற்பாள்**
**இருந்தா ணிமையில்போ லேந்திலைவேற் கண்ணாள்”-**
**(காந்தருவதத்தையார் இலம்-730)**

இவ்விதமாக சீவக சிந்தாமணியில் யாழ் பற்றிய, இசை பற்றிய சிறப்புகள் நிறைந்து காணப்படுகின்றன.

**சான்றாதாரங்கள்**

1. பெருமாள், ஏ. என். *தமிழர் இசை*, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1984
2. சாமிநாதைய்யர். வே. *சீவகசிந்தமாணி மூலமும், நச்சினார்கினியர் உரையும்*- மகாமகோபாத்தியாய தஞ்சை: தமிழ் பல்கலைக் கழகம், 1986
3. திருத்தக்கதேவர். *சீவக சீந்தாமணி மூலமும் உரையும்*, சென்னை: சாரதா பதிப்பகம்.
4. கி.வ.ஜகந்நாதன். தமிழ்க் காப்பியம், *தமிழ் வளர்ச்சித்துறை*
5. சத்ரசூடாமணி, எ., இராஜலட்சுமி, *அனந்தநாராயணன்*, தஞ்சை: சரசுவதி மகால் நூலகம், 2009.
6. ஸ்ரீவித்யா. அ. *யாழின் பரிணாம வளர்ச்சி*, சென்னை, வனிதா பதிப்பகம்.